1990 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்திலே இருந்து பல நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக்கப்படவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். பல நடுநிலைப்பள்ளிகள் அவ்வாறு கேட்கிற போது நடுநிலையாக முடிவு எடுக்கமுடியாத காரணத்தால், இதுபற்றி இப்போது அரசாங்கம் தீர்மானிக்க முடியவில்லை.

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர்நிலைப் பள்ளிக்கான இடத்திற்காக 5 ஏக்கர் நிலமும் அதற்குரிய நன்கொடையும் கூட செலுத்தி இருப்பதாகப் பேரூராட்சியிலிருந்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறபோது, அந்த வேலம்பாளையம் பேரூராட்சிப் பகுதிக்குள் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே, இந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து அங்கே ஒரு உயர்நிலைப்பள்ளி தொடங்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலிலேயே முன்னுரிமையைக் கொடுத்துவிட்டால், அதற்குப் பின்னால் மற்றவர்களுடைய உரிமை பாதிக்கப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது பற்றி ஏதேனும் விளக்கம் தந்து அரசினுடைய இந்தத் துறை கவனிக்கவேண்டும் என்று விரும்புவார்களேயானால், விவரத்தை அனுப்பச் செய்தால், அதற்காக உள்ள உயர்மட்டக் குழு அந்தப் பள்ளிக் கூடத்தையும் பரிசீலிக்கும், அதுபோலவே பக்கத்திலே உள்ள வேறு பல பள்ளி நிர்வாகிகளும் கேட்டிருக்கிறார்கள். அவர்களையும் பரிசீலித்து எதற்கு அதிக வாய்ப்பு தரவேண்டுமோ, அந்த அடிப்படையிலே முடிவு எடுக்க முடியும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிப் பணம்.

*5603—திரு. சா. கணேசன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிப் பணம் ரூ. 250 என்றிருப்பதை ரூ. 400 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வியைப் பொறுத்து விடை, 'இல்லை' என்பதுதான் என்றாலும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு 350 ரூபாய் அளவிற்கு அவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகையை அதிகப்படுத்த அரசு முன் வந்துள்ளது.

[1990 ஏப்ரல் 20

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கும், விடுதலை வீரர்கள், தமிழ் காத்தோர் ஆகியோருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்யும் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

9.10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டிய கேள்வி தானா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விடையை இப்போது தரக் கூடிய நிலையில் இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. கணேசன் அவர்களுக்குத் தொடர்ந்து தேவையில்லை. ஏனென்றால், ஏற்கனவே இது சட்டமுன்வடிவில் வந்திருக்கிறது.

வினா எண். 1396 எடுத்துக் கொள்வதற்கு மாறாக, நம்முடைய முன் வரிசையிலுள்ள அமைச்சர்களின் ஒப்புதலோடு, இப்போது வினா எண் 2357 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சுற்றுலாத் துறை மூலம் சொகுசுப் பேருந்து.

*2357—திரு. ஏ. செங்குட்டுவன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் கண்ணகி கோட்டம், தரங்கம்பாடியில் அமைந்துள்ள டேனிஸ் கோட்டை, தேரழுந்தூரில் அமைந்துள்ள கம்பர் கோட்டம் இம் மூன்றையும் இணைக்க சுற்றுலாத்துறை மூலம் சொகுசுப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.